ஸ்ரீ:

# மொழியைக்கடக்கும் பெரும்புகழான்

(ஸ்ரீ.உ.வே.டாக்டர் M.S.வேங்கடாசார்யஸ்வாமி, காட்டுமன்னார்கோவில்)

நம்பெருமாள் ''எம்பெருமானார் தரிசனம்'' என்று பேரிட்டு நாட்டிவைத்த வைணவசமயத்தில் எம்பெருமானாரின் அணுக்கச்சீடரான கூரத்தாழ்வான் பெறும் இடம் போற்றுதற்குரியது. இராமாநுசர் புகழ்பாடும் 'இராமானுசநூற்றந்தாதி'யில் திருவரங்கத்தமுதனார், ''மொழியைக்கடக்கும் பெரும்புகழான்'' என்று கூரத்தாழ்வானைப் போற்றியுள்ளார். மன்னுபுகழ்சேர் மணவாள மாமுனிகள் தம் யதிராஜ விம்ஶதியில், ''வாசாமகோ₃சர மஹாகு₃ண தே₃ஶிகாக்₃ர்ய– கூராதி₄நாத₂'' (ஶ்லோகம் 14) என்று கூரத்தாழ்வானைப் போற்றியுள்ளார். கூரத்தாழ்வான் பெருமை ''குருபரம்பராப்ரபாவ''நூல்களிலும், பூர்வாசார்யவ்யாக்யாந க்ரந்தங்களிலும், ''வார்த்தாமாலை''யிலும் மற்றும் பலநூல்களிலும் பேசப்பெறுகிறது. பூர்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ள பேருரைகளில் இடம்பெறும் ஐதிஹ்யம் ஸம்வாதம் நிர்வாஹம் முதலியவை வழிநின்று கூரத்தாழ்வான் பெருமையைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகிறது. ஆழ்வான் பெருமை வ்யாக்யாநங்களில் சுமார் ஐம்பது இடங்களில் பேசப்பெறுகிறது. சில முக்யமானவை மட்டும் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பெறவுள்ளன.

### மாயன் மணிவண்ணன் தாள்பணியும் மகன்—ஆழ்வான்

பெரியாழ்வார்திருமொழியில், ''தொடர்சங்கிலிகை'' என்று தொங்கும் திருமொழியின் இறுதிப்பாசுரம், ''ஆயர்குலத்தினில்'' என்று தொடங்கி ''மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மக்களைப் பெறுவர்களே'' (1–7–11) என்று பலச்ருதி கூறுகிறது. இப்பகுதிக்குத் திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேஶத்தில் இடம்பெறும் செய்தி வருமாறு:—

''(மக்களைப்பெறுவர்களே) ...கூரத்து ஆழ்வார், நங்கையார் திருவடிச்சார்ந்தவாறே, பின்பு ஆவர்த்திப்பதாக அறுதியிட்டு அது கூடுகிற அளவில், தம்முடைய புத்ரரான ஆழ்வானுடைய ஸ்ரீவைஷ்ணவத்தைக்கண்டு 'இதினுடைய எடுப்பு இருந்தமை கண்டோமுக்கு, ஆழ்வானுக்கு அந்யஶேஷத்வம் வரவொண்ணாது' என்று ஆவர்த்திக்கை தவிர்ந்தாரிறே'' (திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேஶம்.1–7–11) (நங்கையார்—கூரத்தாழ்வானின் தாயார், ஆவர்த்தித்தல்—மறுமணம் செய்துகொள்ளல்)

கூரத்தாழ்வான் திருத்தாயார் (கூரத்தாழ்வாரின் மனைவி) மகன் ஆழ்வான் சிறுபிள்ளையாக இருக்கும்போதே திருநாட்டை அலங்கரித்தார். கூரத்து ஆழ்வார் ஶாஸ்த்ரவிதிப்படி இரண்டாம் திருமணம் செய்து கொள்ள விழைந்து, அது கை கூடும் நிலையில், கூரத்தாழ்வான் ''மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மகன்''

என்னும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திக்கு இலக்கணமாக எழுந்தருளியிருக்க, ஆழ்வானுக்கு அந்யஶேஷத்வம் (மாற்றுந்தாய்க்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை) வரக்கூடாது என்று தம் திருமணத்தைத் தவிர்ந்தார் என்று கூறப்படுகிறது. இதனால், ஆழ்வான் துளசிஇலை, முதல்இலை முதலாகவே துளசியின் தன்மையுடன் இருப்பதுபோல பிறந்ததுவே முதலாக ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயுடன் விளங்கினார் என்று தெரிகிறது. பெரியாழ்வார் ''பாயசீருடைப் பண்புடைப் பாலகன் மாயன்'' என்று கண்ணனைப் போற்றினார். (பெரியாழ் திரு 1—1—7). அம்மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மகனைக் கூரத்தாழ்வான் உரையாசிரியரால் காட்டப்பெற்றார். கூரத்தாழ்வானின் க்ருஷ்ணபக்தி மிக உன்னதமானது. ''பிறந்தவாறும்'' என்னும் பாசுரத்தை அநுஸந்தித்து மோஹித்துக் கிடந்தார் என்னும் ஐதிஹ்யமும் உண்டு. கூரத்தாழ்வார் மறுமணம் தவிர்ந்த செய்தி திருவாய்மொழி 5—5—1 பாசுரவிளக்கத்தில் ஈடு வ்யாக்யாநத்திலும் இடம்பெற்றுள்ளது. அப்பகுதி வருமாறு:—

''அன்னைமீர்காள்...கூரத்தாழ்வார் ஓரளவிலே நங்கையார் திருவடிச்சார்ந்தவாறே இன்னுமொரு விவாஹம் பண்ணுவோமா என்று விசாரித்து, 'இது தான் க்ரமத்தாலே வந்து ஆழ்வானுக்கு விரோதமாய்த் தலைக்கட்டும் இனித்தான், 'அநாஶ்ரமீ ந திஷ்டே$_2$த்' என்று ஶாஸ்த்ரம் சொல்லாநின்றது. இஶ்ஶாஸ்த்ரத்தை அநுஷ்டிப்போமா, பாகவத பரிசர்யை பண்ணுவோமா என்று விமர்ஶியா 'அஸ்ஸாமாந்ய த$_4$ர்மத்திற் காட்டில், இவ்விஶேஷத$_4$ர்மமே ப்ரப$_3$லம்' என்று தவிர்ந்தார். (திருவாய் 5—5—1 ஈடு)

இப்பகுதியில் மநுதர்மஶாஸ்த்ரத்தில் இடம்பெறும் ஶ்லோகம்

''ப்$_3$ரஹ்மசாரி க்$_3$ருஹஸ்தோ வா வாநப்ரஸ்தே$_2$஽த$_2$ பி$_4$க்ஷுக:।
அநாஶ்ரமீ ந திஷ்டே$_2$த்து தி$_3$நமேக மநாபதி''

என்னும் ஶ்லோகத்தில் உள்ளபடி, மனைவியை இழந்தவன் மீண்டும் மணம்புரிந்த க்ருஹஸ்தனாக இருக்கவேண்டும் அல்லது அடுத்த ஆஶ்ரமத்தைப் பின்பற்ற வேண்டும் என்னும் விதி சொல்லப்பட்டது. இது ஸாமாந்ய தர்மம். பாகவத பரிசர்யை விஶேஷதர்மம். அதைப் பின்பற்றவேண்டும் என்று, ஆழ்வானுக்குப் பரிசர்யை பண்ணுவதை உயர்ந்ததாகக் கொண்டு மறுமணம் தவிர்ந்தார். ''தனக்கென வாழாப் பிறர்க்கென வாழுநற்பெருநராக'' ஆழ்வான் தந்தையார் எழுந்தருளிமகிழ்ந்தார். இப்பகுதியில் தன்மகனை, ''பரமபாகவதனாக''த் தந்தை உகந்தார் என்னும் விஷயம் புலப்படுகிறது. ''ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே ! சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'' என்னும் புறநானூற்றுத் தந்தையாக ஆழ்வார் திகழ்ந்தார். (சங்ககாலச் சமயம் வைணவம் அன்றோ).

**மறந்தும் புறந்தொழாமாந்தர் (செய்யாதன செய்யோம்)**

திருப்பாவையில் பாவைநோன்பு மேற்கொண்டவர்களின் இயமநியமங்கள் அந்நூலின் இரண்டாம் பாசுரத்தில் கூறப்பெற்றுள்ளன. வையத்து வாழ்வீர்காள் என்று

தொடங்கும் பாடலில் ''செய்யாதன செய்யோம்'' என்னும் ப்ரதீகத்துக்கு அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அமைத்த உரை வருமாறு—
(செய்யாதன செய்யோம்) ஆழ்வான், ''எங்கள் பூர்வர்கள் தே$_3$வதாந்தர ப$_4$ஜனம் பண்ணாமையாலே'' என்றானாம். (திருப்பாவை—2 ஆறாயிரப்படி)

கூரத்தாழ்வானிடம் சிலர் சென்று நீங்கள் திருமாலை மட்டும் தொழுகிறீர்கள்; ஏன் பிறதெய்வங்களைத் தொழுவதில்லை'' என்று கேட்டனர். ஆழ்வான், ''எங்கள் பெரியோர் பிறதெய்வங்களைத் தொழார்'' அவர்கள் செய்யாதவற்றை நாங்களும் செய்வதில்லை, 'செய்யாதன செய்யோம்' '' என்றார் — என்று கூறப்பட்டுள்ளது.

இதனால் கூரத்தாழ்வான் தேவதாந்தரபஜநத்தில் ஈடுபடாதவர் என்றும், திருப்பாவையில் ஈடுபாடுடையவர் என்றும் நாம் அறிகிறோம். பிறதேவதைகளை நிந்தை செய்து பிறர் மனத்தைப் புண்படுத்தாது வாழ்ந்த மஹான் என்றும் தெரிகிறது.

**பாகவதர் பெருமையை ஆழ்வான் அருளிச்செய்தலும் அவர் நிஷ்டையும்**

திருப்பாவை நோன்பு நோற்கும் பெண்களுக்கு உதவிசெய்ய வந்த வருணன், 'நான் உங்களுக்குச் செய்ய வேண்டியதென்ன' என்று பணிவுடன் கேட்க, 'ஆழிமழைக் கண்ணா' என்னும் பாசுரத்தில் பாவையர் வருணனுக்கு — ஆணையிடுகிறார்கள். அவ்வாறு வருணன் கோபியரைக் கேட்கும் செய்திக்கு உவமையாகக் கீழ்க்காணும் செய்தி திருப்பாவை நாலாயிரப்படி பேருரையில் இடம்பெற்றுள்ளது.

''ஆழ்வானை ஒரு ப$_4$ட்டன், ''தே$_3$வதாந்தரங்களை நீங்கள் கண்டால் பண்ணும் ஆசாரமென்?'' என்று கேட்க, ''ஶாஸ்த்ர விருத்$_3$த$_4$மாகக் கேளாதே கொள்ளாய்; தே$_3$வதாந்தரங்கள் உங்களைக் கண்டால் பண்ணும் ஆசாரமென்? என்று கேளாய்'' என்றார். இதனால் பிறதேவதைகள் ஸ்ரீவைஷ்ணவர்களை அநுஸரித்து நடப்பர் என்பது ஆழ்வான் திருவுள்ளமாகிறது. விஷ்ணுதர்மம் மாங்கல்ய வ்ருத்தி ஸ்தோத்ரத்தில் ''த்$_3$ரவந்தி தை$_3$த்யா: ப்ரணமந்தி தே$_3$வதா:'' என்று ஹரியிடம் பக்தியுள்ள தேவதைகள் விஷ்ணுபக்தர்களிடம் அவ்வாறு நடந்துகொள்வர் என்பது கருத்து. கீழ்க்காணும் பாசுரங்களும் ஒப்பு நோக்கத்தக்கன:—

அவன் தமர் எவ்வினையராகிலும் எங்கோன்
அவன் தமரே என்றொழிவதல்லால் — நமன்தமரால்
ஆராயப்பட்டு அறியார் கண்டீர் அரவணைமேல்
பேராயற்கு ஆட்பட்டார் பேர். (முதல் திருவ—55)

திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழாமாந்தர் — இறைஞ்சியும்
சாதுவராய் போதுமின்களென்றான் நமனும்தன்
தூதுவரைக் கூவிச்செவிக்கு. (நான்முகன் திருவ—68)

மேற்கூறிய பாசுரங்களில் உள்ள செய்திகள் விஷ்ணுபுராணத்தில் உள்ளவை.

ஸ்ரீவேங்கடேச்வர ஸுப்ரபாதத்தில் இடம்பெறும்
‘‘ஸௌர்யேந்து$_3$பெ$_4$ளமபு$_3$த$_4$வாக்பதி காவ்யஸௌரி,
ஸ்வர்ப$_4$ாநுகேதுதி$_3$விஷத்$_3$ பரிஷத்ப்ரத$_4$ாநா:
த்வத்$_3$த$_3$ாஸதா$_3$ாஸ சரமாவதித$_3$ாஸத$_3$ாஸா:
ஸ்ரீவேங்கடாசலபதே தவ ஸுப்ரப$_4$ாதம்’’ என்னும் 18ம் ஶ்லோகம் ஆழ்வான் திருவுள்ளப்படி அமைந்ததாகும்.

**கூரத்தாழ்வான் ‘தயாநிதி’ (ஸர்வபூத ஸுஹ்ருத்)**

எம்பெருமானுக்கு பலம், ஐஶ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ் ஆகிய குணங்கள் இருப்பினும் அவை ‘தயை’ என்னும் கல்யாணகுணத்திற்கு அடுத்த நிலையில் இருப்பவை என்று பெரியோர் கூறுவர்; இச்செய்தியை வேதாந்தாசாரியர்
‘‘அநுசர ஶக்த்யாதி$_3$ கு$_3$ணும் அக்$_3$ரேஸர பே$_3$ாத$_4$ விரசிதாலோகாம்।
ஸ்வாதீ$_4$நவ்ருஷகி$_3$ரீஶாம் ஸ்வயம் ப்ரபூ$_4$தாம் ப்ரமாணயாமி த$_3$யாம்॥ (ஸ்ரீத$_3$யாஶதகம்—11)
என்கிறவிடத்தில் காட்டியுள்ளார். ஆழ்வான் ஸ்ரீவரதராஜஸ்தவத்தில்
ஸ்ரீநிதி$_4$ம் நிதி$_4$மபாரமர்த்தி$_2$நாம் அர்த்தி$_2$தார்த்த$_2$ பரித$_3$ாந தீ$_3$க்ஷிதம்।
ஸர்வபூ$_4$த ஸுஹ்ருத$_3$ம் த$_3$யாநிதி$_4$ம் தே$_3$வராஜமதி$_4$ராஜம் ஆஶ்ரயே॥(வரதராஜ ஸ்த—2)
என்று தேவராஜனை ஸர்வபூதஸுக்ருத்தாக (அனைத்துயிரினங்களுக்கும் அன்பனாக)ப் பணித்தார். ‘‘ஸர்வபூ$_4$தஸுஹ்ருத்’தாகத் தாமே இருந்தார்.

திருமாலை 41ம் பாடலில் (வானுளார் அறியலாகா) உள்ள ‘ஏலும்’ என்னும் பகுதிக்கு விளக்கம் தரும்பொழுது, உரையாசிரியர் கீழ்க்காணும் செய்தியைத் தந்துள்ளார்;—
‘‘**ஏலும்...** ஸர்ப்பாஸ்யத்திலேயகப்பட்ட மண்டூ$_3$கத்தினுடைய ஆர்த்தியைக் கேட்டு, இது ஆர் அறிந்து விடுவிக்கக்கூப்பிடுகிறது? என்று ஆழ்வான் மோஹித்தான்

தவளையொன்றைப் பாம்பு விழுங்கத் தொடங்கியபொழுது, தவளை கூக்குரலிட்டது. அக்குரலைக் கேட்ட பரமகாருணிகரான ஆழ்வான் ‘‘ஐயோ! இந்தத் தவளை, தன்னைப் பாம்பின் வாயிலிருந்து யார் விடுவிக்கப் போகிறுர் என்று கூக்குரலிடுகிறது’’ என்று அத்தவளையின் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணி மயங்கி விழுந்தார். இதனுல் ஆழ்வான் ‘‘ஸர்வபூதஸுஹ்ருத்’’ என்று தெரிகிறது.

**கூரத்தாழ்வான் பொறுமையின் எல்லைநிலம்**

உலகத்தில் பிறந்தவர் ஏதேனும் ஒருநிலையில் பிறர்க்குத் தீங்கிழைக்கநேரிடும்; அவ்வாறு செய்யும் பொழுது தீங்கினை எதிர்கொள்பவர் பொறுமையுடன் நடந்து கொள்ளவேண்டும். பொறுமையின் பெருமையை வால்மீகிபகவான்,
‘‘க்ஷமா த$_3$ாநம் க்ஷமா ஸத்யம் க்ஷமா யஜ்ஞஶ்ச புத்ரிகா:।
க்ஷமாயஶ: க்ஷமா த$_4$ர்ம: க்ஷமாயாம் விஷ்டிதம் ஜக$_3$த்॥’’ (ரா.பா.33—9)

என்றருளிச்செய்துள்ளார். பகவான் ஸ்ரீராமனே ''க்ஷமயா ப்ருதி₂வீ ஸம:'' என்றும் அவர் அருளியுள்ளார். ஆழ்வானும் அத்தகைய கல்யாணகுணத்தைக் கொண்டிருந்தார் என்று நம் ஆசிரியர் நஞ்ஜீயர் அருளிச்செய்துள்ளார். அச்செய்தி வருமாறு:—
''நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்''...கூரத்தாழ்வானும், ஆண்டாளும், பிராட்டியும் போல்வார்'' (கண்ணி 4 நஞ்சீயர் வ்யாக்யானம்)

நன்மையால் மிக்க நான்மறையாளரில் முதலிடம் ஆழ்வானுக்கும், அடுத்த இடம் அவர் தேவிகளுக்கும், அடுத்தஇடம் ஸீதாப்பிராட்டிக்கும் அளிக்கப்பெற்றுள் ளமை நோக்கத்தக்கது. தன் கண்கள் போகக் காரணமானவருக்கு உதவ ஸ்ரீவரதராஜனிடம், 'நான் பெற்ற பேறு நாலூரான் பெறவேணும்' என்று ப்ரார்த்தித்தார். அவர் தேவிகள், அகளங்கநாட்டாழ்வான் தன் பிழைக்குப் பரிகாரம் தேடாமல் இறந்தான் என்று வருந்தினள். ஸீதை அஶோகவநத்தில் தன்னைத் துன்புறுத்திய அரக்கிகளை மன்னித்து அநுமனிடமிருந்து காத்தாள். இதனல் ஆழ்வான் பொறுமையின் எல்லைநிலம் என்றும் மன்னிக்கும் கல்யாணகுணம் உடையவர் என்றும் அறியலாம்.

**தீக்குறளை சென்றோதோம் என்னும் நிஷ்டை**

உலகத்தில் பிறந்தவர் தம்மை உயர்வாகவும் பிறரைத் தாழ்வாகவும் மதிப்பிடும் நிலை பொதுவாக உள்ளதாகும். ''ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'' என்றார் வள்ளுவர். ஏதேனும் பிறரைப் பற்றிக்கூறித் திரிதல் உலகில் பலஇடங்களில் காணப்படும் நிகழ்வாகும்.

ஆழ்வான் பிறரைக்குறை கூருதவர். அதுமட்டுமின்றி பிறர்குறை கூறித்திரிபவரையும் திருத்திப்பணிகொள்ளும் பண்புடையவர் என்று பேருரைகள் மூலம் அறியலாம்.

திருவாய்மொழி ஈடு வ்யாக்யானத்தில் 3—5—7 பாடலுக்கு உரை வரைந்த ஆசிரியர் ''(**உத்தமர்கட்கு என் செய்வாரே**)....சிலர் அங்கே வந்து ஆழ்வானைக் கண்டு ''ஒருவனுண்டிறே'' என்று போகப்புக, **ஒருவரையும் ஒருகுறை சொல்லியறியாதவன்''** என்று ஆழ்வானைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆண்டாள், நோன்புக்காலத்தில் பின்பற்றவேண்டும் என்று அருளிச்செய்ததை வாழ்நாள்முழுதும் கடைப்பிடித்த ஆழ்வான் பெருமையைச் சொல்லவும் முடியுமோ?

ஆழ்வான் சீடரான பிள்ளைப்பிள்ளையாழ்வான், முதலில் பாகவததூஷணை செய்து வந்தார். அவரைத் திருத்திப் பணிகொள்ள அவரிடம் ''அடியார்களிடம் திரிகரணத்தாலும் அபசாரப்படுவதில்லை'' என்று 'வாக்தாநம்' வாங்கி அவரைத் திருத்திப்பணிகொண்டார். திருமாலை 43ஆம் பாடலுக்கு அமைந்த உரையில் இச்செய்தி கூறப்பெற்றுள்ளது. அதுவருமாறு:—
(**தாம்புலையர்**......பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆத்மஹிதம் சொன்ன ஸமநந்தரத்திலே ஆழ்வான் பணித்த வார்த்தையை ஸ்மரிப்பது. திருமாலடியார்களைப் பழிப்பவர் புலையர்

என்பது ஆழ்வான் திருவுள்ளமாகும்.

**தானே ஆசாரியனாகவும் ஶிஷ்யனாகவும் இருந்த அடக்ககுணம்.**

உலகத்தில் மேன்மையான ஆசிரியராக இருக்க விரும்பும் நிலையே பெரும் பாலும் காணப்பெறும்; பிறருக்கு உபதேசம் செய்வது என்பது எல்லாரும் விரும்பும் செயலாகும். தம் சீடனை ஆசாரியராகக் காட்டித் தாம் சீடனாக நடந்துகாட்டிய பெருமை பேராசானாக விளங்கிய ஆழ்வானுக்கு மட்டுமே உள்ள பெருமையாகும். இச்செய்தி பெரியதிருமொழிப்பாடல் (7–5–2)உரையில் இடம்பெற்றுள்ளது. அப்பகுதி வருமாறு:— ''தேரில்பாகனாயூர்ந்த'' ஆழ்வானுக்கு மூலம் வாசித்துப்போந்தார் சிலரிலே, ஒருவருக்கு க்₃ரந்த₂ம் பார்க்கவேண்டி, ஆழ்வானோடே திருமுடிக்குறையிலேயிருந்து பாராநிற்கச்செய்தே அரையன் வந்தானாய், அவ்வளவிலே அவன்கையிலே க்₃ரந்த₂த்தை ஆழ்வான் தான் வாங்கிப்படித்துக் கொண்டிருந்தானாம்''

இப்பாடல் திருவழுந்தூர் திவ்யதேஶமங்களாஶாஸநத்தில் இடம்பெறுகிறது.

''பாரித்தெழுந்த படைமன்னர் தம்மைமாள பாரதத்துத்
தேரில் பாகனாயூர்ந்த தேவதேவன் ஊர்போலும்'' (பெரிய திரு 7–5–2)

என்னும் பகுதியில் கண்ணன் (பரம்பொருள்) தன்னைத் தேரோட்டியாகத் தாழவிட்டுக் கொண்ட செய்தி கூறப்பெற்றுள்ளது. கண்ணனைப்போல் தம்மைத் தாழவிட்டுக் கொண்ட மஹாசார்யரான கூரத்தாழ்வான் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பெரியவாச்சான்பிள்ளை எடுத்துரைத்துள்ளார்.

கூரத்தாழ்வான் நாள்தோறும் காலக்ஷேபம் ஸாதிக்கும்பொழுது அவரிடம் மூலநூல் பாடம் கேட்டுவந்த ஒருவருக்கு ஆழ்வானிடம் மேலும் விளக்கம் கேட்க வேண்டும் என்னும் அவா எழுந்தது; ஆயினும் அவர் தம்மை மிகவும் உயர்ந்தவராக எண்ணிக்கொண்டமையால் மறைவிடத்தில் பாடம் கேட்க விழைந்தார். திருவரங்கத் தில் மறைவிடத்தில் யாரும் அறியாதபடி பாடம்கேட்டு வந்தார். திடீரென்று அரையன் (அரசன் அல்லது திருகோயில் அரையர்) அங்குவந்துவிடவே, ஆழ்வான் தம்மிடம் பாடம் கேட்பவர் கையிலிருந்து மூலபாடபுத்தகத்தைத் தம்கையில் வாங்கிக் கொண்டார். பாடம் கேட்டவரை ஆசிரியராகவும், தாம் பாடம் கேட்பவர் போலவும் பிறர் நினைக்கும்படி நடந்து கொண்டார். தம்மிடம் பாடம் கேட்டவர் மனம் மகிழும்படித் தம்மைத் தாழவிட்டுக்கொண்ட பெருமையை (ஸௌலப்யம்) உரையாசிரியர் கருத்தில் கொண்டு, கண்ணபிரான் (பரம்பொருள்) பார்த்தனுக்குச் சாரதியாய் வந்த நிலையுடன் ஒப்பிட்டு மகிழ்கிறார்.

இந்த நிகழ்ச்சியைப் போன்றதொரு நிகழ்ச்சி வேறு எங்கும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. பாடம் சொல்வோர் மாணாக்கனின் உணர்வுகளுக்கும் மதிப்புத் தரவேண்டும் என்னும் போதனாமுறை (Teaching Methodology) ஆழ்வான் மூலம் வைணவஉலகு அறிந்தது.

தற்கால ஆசிரியர்களும் மாணவர்களே மதித்து நடக்க நன்மை விளையும் என்று கூறலாம்.

## ஆழ்வார் அருளிச்செயல்களில் ஆழ்ந்த ஈடுபாடு (பாவநாப்ரகர்ஷம்)

எம்பெருமான் திவ்ய சரிதங்களைக்கேட்ட மாத்திரத்தில் மோஹித்து விழுபவர் உளர் என்பதைக் காட்டும் ஐதிஹ்யங்கள் உரைகளில் இடம்பெற்றுள்ளன.

திருவிருத்தம் 98ஆம் பாடலுக்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிய உரையில் கீழ்க்காணும் செய்தி இடம்பெற்றுள்ளது.

''அரையனுக்குப் போகிற பாலை ஓர்இடையன் களவு கண்டான் என்று கட்டி அடியாநிற்கப் பிள்ளை உறங்காவில்லிதாஸர் கண்டு பரவஶராயிருந்து, 'இத்தால் வந்ததுக்கெல்லாம் நான் கடவன் என்று விடுவித்துக்கொண்டாராம்.''

எம்பெருமான் வெண்ணெயைக் களவு கண்டு அமுதுசெய்தான் என்பது நெஞ்சால் நினைக்கவும் அரிதாயிருக்கும். (நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னும் ஈனச்சொல்லே) என்பது ஆழ்வார் திருவுள்ளம். அப்பாசுரத்தில் ஈடுபட்ட பிள்ளை உறங்காவில்லிதாஸர் அரசனுக்குரிய பாலைத் திருடிய இடையனைக் கண்ணனாகவே கண்டு அவன் குற்றத்தைத் தம் குற்றமாக ஏறிட்டுக் கொண்டு அவனை விடுவித்த செய்தி உரைப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

ஆழ்வான், பிள்ளைஉறங்காவில்லி தாஸரிடம் மிகுந்த மரியாதை உள்ளவர். ''ப₄க₃வத்கு₃ண ப்ரஸங்கத்திலே ஶிதிலராம்படி பிறந்த உம்முடைய ஜந்மமும் ஒரு ஜந்மமே'' என்று ஆழ்வான் பிள்ளைஉறங்காவில்லி தாஸரைக் கொண்டாடியசெய்தி உரையில் இடம்பெற்றுள்ளது. (திருவிருத்தம் 99 நம்பிள்ளை ஈடு) அப்பகுதியில் ''ஆழ்வான் வீராணத்தில் ஒருபெண்பிள்ளையைக் குடங்காலிட்டு, 'கள்வன்கொல் யானறியேன்' என்று சந்தையிட்டு, மேலடி தோற்றுமல் மோஹித்தாராம் என்றும் கூறப்பட்டுள்ளது.

கூரத்தாழ்வான் ''வீராணம்'' எனப்பெறும் வீரநாராயணபுரத்தில் (காட்டுமன்னார் கோயில்—ஸ்ரீமந்நாதமுனிகள் ஸ்ரீஆளவந்தார் அவதாரஸ்தலத்தில்) சிலகாலம் எழுந்தருளிப் பெரியதிருமொழி சந்தை சொல்லிவரும் நாளில் ஒருநாள் ஒரு பெண்பிள்ளையை மடியில் வைத்துக்கொண்டு (ஆழ்வான் பெண் என்றொரு கருத்தும் உண்டு. ஆழ்வானுக்குப் பெண்பிறந்ததாக வேறுநூல்களில் இல்லை. வல்லார் வாய்க் கேட்டுணர்க) சொல்லிவரும் பொழுது''கள்வன் கொல் யானறியேன் கரியான் ஒரு காளைவந்து'' (பெரிய திரு 3—7—1) என்னும் பாசுரம் சொல்லும்போது அப்பெண்பிள்ளையை அவள் கணவன் அழைத்துச் சென்றுவிட்டான். அப்போது அப்பாசுரப்பொருள் நெஞ்சில்ஓட அந்நிகழ்வினுல் ஆழ்வான் மோஹித்து(மயங்கி)க் கிடந்தார்.

ஆழ்வான் திருவாய்மொழிக்குப் பொருளுரைக்கும்பொழுது நடந்த இத்தகைய

நிகழ்ச்சி பெரியவாச்சான்பிள்ளையால் கூறப்பெற்றுள்ளது. அது வருமாறு:—

''கிடாம்பியாச்சான் ஆழ்வானோடே திருவாய்மொழி கேட்கிற நாளிலே ஒரு நாள் ஸ்ரீபாத₃த்திலே புகும்போதிலே தாழ்த்துப்புக, ''ஏன் நீ வைகினுயீ'' என்ன, 'ஆழ்வான் பாடே திருவாய்மொழி கேளாநின்றேன்' என்றுனுய், 'இன்று என்ன திருவாய்மொழி நிர்வஹித்தான்?'' என்று கேட்டருள, 'பிறந்தவாறு' என்றுனுய், 'அதிற்சொன்ன வார்த்தகளென்?' என்ன, ''நிர்வஹிப்பதாக ஆரம்பித்து இயல்சொல்லி அநந்தரம், ஆழ்வாருடைய பாரவஶ்யதையை அநுஸந்தித்து நெடும்போது கண்ணுங்கண்ணீருமாயிருந்து ''இவ்வாழ்வாரும் ஒருவரே! இவர்க்கு ஓடுகிற ப₄ாவவ்ருத்திக்கு நாமிருந்து பாசுரமிடுகையாவதென்? என்று 'இற்றைக்கு விடலாகாதோ' என்று விட்டான் என்ன, ''என்ன பரமசேதநனே'' என்றருளிச் செய்தாராம்.

இச்செய்தி கிடாம்பியாச்சான் ஸ்ரீஉடையவர் உரையாடலாக அமைந்துள்ளது. ஆழ்வான் அவருடைய ஆசாரியரான உரையவரால், 'என்ன பரமசேதநனே' என்று போற்றப்பெற்றுள்ளார்.

**ஆத்மகுணங்களைக் காட்டிலும் ஆசார்ய ஸம்பந்தமே உயர்ந்தது**

ஒரு சேதநனுக்கு ஆத்மகுணங்களும் இருக்கவேண்டும். ஆசார்ய ஸம்பந்தமும் இருக்கவேண்டும். ஆத்மகுணங்கள் ஆசார்யஸம்பந்தத்துக்கு இடையூருனல் ஆசார்ய ஸம்பந்தத்திற்கு முன்னுரிமை தரவேண்டும் என்னும் கொள்கைளை ஆழ்வான் அநுஷ்டாநத்தில் காட்டித்தந்தார். இச்செய்திகுறித்த இரண்டு ஐதிஹ்யங்கள் வருமாறு:—

(உனக்கென்ன வேறுடையை) ''நீ ஒருவர்க்கும் விரோதியல்லை; நீ புக்குத் திருவடித்தொழு என்ன, ஆழ்வான் வார்த்தையை நினைப்பது'' (திருப்பாவை—15) —மூவாயிரப்படி

உடையவர் வெள்ளைசாத்தி எழுந்தருளின காலத்திலே, திருவடிகளில் ஸம்ப₃ந்த₄முடையாரை 'பெருமாளை திருவடித்தொழ விடவேண்டா' என்று விலக்க, ஆழ்வானை 'நீர் திருவடிதொழலாகாதோ' என்ன, 'ஆத்மகு₃ணம் மோக்ஷஹேது என்றிருந்தோம், அது ப₃ந்த₄ஹேதுவானபின்பு எம்பெருமானுர் திருவடிகளில் ஸம்ப₃ந்த₄த்தை அறுத்துக்கொள்ளவோ? என்று மீண்டு போந்தார்.
—கண்ணிநுண்சிறுத்தாம்பு பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.

சோழஅரசன் ஒருவன் தீவிர சைவனுகி, வைணவமதத்துக்கு இடையூறு விளைவித்தகாலம்; அம்மன்னவன் ''சிவாத் பரதரம் நாஸ்தி' (சிவனுக்கு மேம்பட்ட தெய்வமில்லை) என்று எழுதிப் பெரியோர்களிடம் கையொப்பம் வாங்கினுன். அவன் இராமாநுசரிடம் கையொப்பம் பெறவிழைந்து அவரை அழைத்துவர இராமாநுசர் திருமடத்திற்கு சேவகர்களை அனுப்பினுன்.

அப்பொழுது எம்பெருமானார் நீராடச் சென்றிருந்தார். சூழ்நிலையை அறிந்த ஆழ்வான் உடையவரின் காவியுடையை அணிந்து பெரியநம்பிகளுடன் அரசவைக்குச் சென்றார். அரசன் கையொப்பம் கேட்க, அவர் அரசன் கூறிய தொடருக்குப் பின் ''த்$_3$ரோணமஸ்தி தத:பரம்'' என்று எழுதிக் கையொப்பமிட்டார். அரசன் கோபம்கொண்டு ஆழ்வான் கண்ணைப் பிடுங்க ஆணையிடத் தாமே கண்ணைப் பிடுங்கிக்கொண்டார். பெரியநம்பிகளின் கண்கள் பிடுங்கப்பட்டன. சோழ அரசன் இராமாநுசருடன் தொடர்புடையாரைத் திருவரங்கம் கோயிலினுள் விடக்கூடாது என்றும் ஆணையிட்டான். நீராடித் திரும்பிவந்த உடையவர் செய்தியறிந்து வெள்ளைவஸ்திரம் (ஆழ்வானின் வஸ்திரம்) சாற்றிக் கொண்டு கருநாடகமாநிலம் எழுந்தருளினார்.

அச்சூழ்நிலையில் கோயில் காவலர்கள் ஆழ்வானின் ஆத்மகுணத்தைப் புகழ்ந்து விதிவிலக்காக அவரைமட்டும் கோயிலுக்குள் சென்று வழிபட அநுமதித்தனர். ஆழ்வான், ஆத்மகுணம் ஆசார்யஸம்பந்தத்தைக் குலைத்து, அதுவே பந்தஹேதுவாக அமையும்பொழுது ஆத்மகுணத்தால் வரும் லாபம் தேவையற்றது என்று பெருமாளை ஸேவிக்காமல் திரும்பினார். இதனால் ஆசார்யஸம்பந்தமே உய்வுதரும் என்று தெரிவிக்கப்படுகிறது. மாமுனிகள் ஆழ்வான் கருத்தைப் பின்பற்றி ''ஞானமனுட்டானமிவை...தானே வைகுந்தந்தரும்'' என்று ஆசார்யஸம்பந்தத்தை மோக்ஷஹேதுவாகக் காட்டினார். 'தன் குருவின் தாளிணைகள் ..'' என்கிற பாசுரத்தில் ஆசார்யபக்தியில்லாதவர், பகவத்பக்தி உடையவராயினும் நண்ணார் அவர்கள் திருநாடு என்று அருளிச்செய்துள்ளார்.

**பிறர்மினுக்கம் பொறுமையில்லாப் பெருமை**

இவ்வுலகில் தற்பெருமை பேசுதல் பலரிடம் இயல்பாகவுள்ளது; பிறர் பெருமையைப் போற்றுதல் அரிதாக உள்ளது. பிறர் உயர்வைப் போற்றும் உயர் பண்பு ஒரு சிலரிடமே உள்ளமையை நாம் காண்கிறோம். அத்தகைய பண்பினை ஆழ்வானிடத்தில் நன்றாகக் காணலாம்.

ஒரு ஸமயம் ஆழ்வான் திருக்குமாரரான பட்டர், தம் தந்தையாரிடம் ''சிறுமாமனிசர்'' (திருவாய் 8–10–3) என்ற ப்ரதீகத்துக்கு விளக்கம் கேட்டார். சிறுமையும், பெருமையும் ஒன்றோடொன்று முரண்பட்ட நிலையில் இரண்டும் எவ்வாறு சேர்ந்திருக்கும் என்பதே ஐயம். அதற்கு ஆழ்வான் பணித்த விடையில் அவர்காலத்தில் வாழ்ந்த முதலியாண்டான், அருளாளப்பெருமாள் எம்பெருமானார், எம்பார் (கோவிந்தப் பெருமாள்) முதலானோர் 'சிறுமாமனிசர்' என்றருளினார். அப்பகுதி வருமாறு:—
''சிறுமாமனிசராய்'' சிறுமைபெருமையாகிற விருத்த த$_4$ர்மத்$_3$வயத்துக்கு ஏகத$_4$ர்மியில் ஸமாவேஶம் கூடும்படி எங்ஙனே?'' என்று ப$_4$ட்டர் ப$_3$ால்யத்திலே ஆழ்வானைக் கேட்க, 'நம்மோடொக்க அந்நபாநாதி$_3$கள் த$_4$ாரகம் என்னலாய் ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் அவக$_3$ாஹநம் பார்த்தால் நித்யஸூரிகளோடு ஒப்பர் என்னலாயிருக்கிற ஆண்டான்,

அருளாளப்பெருமாள் எம்பெருமானார், ஸ்ரீகோவிந்தப்பெருமாள் இவர்கள் காண் சிறுமாமனிசர் ஆகிறார்'' என்று பணித்தார். (திருவாய்மொழி ஈடு வ்யாக்யானம் 8–10–3)

**கூரத்தாழ்வான் கடாக்ஷமே உய்வு தரும்**

''இராஜேந்திரசோழன்' என்னும் ஊரில் வாழ்ந்த அந்தணன் மகன் விதிவசத்தால் புத்தமதத்தில் சேர்ந்துவிட்டான். பூணூலை அறுத்துப்போட்டு மொட்டையடித்துக் கொண்டான். கூரத்தாழ்வான் அந்த இடத்துக்கு எழுந்தருளினார். புத்தமதம் சேர்ந்த அந்தணன் மகன் மீண்டும் ஶிகை வைத்துக்கொண்டு, பூணூலையும் அணிந்து கொண்டான். அவனைக்கண்ட அந்தணன், ''கூரத்தாழ்வானைச் சந்தித்தாயோ?'' என்று கேட்டான். அங்கிருந்த பிறர் 'நீ அதனை எவ்வாறு அறிந்தாய்?'' என்று அந்தணனிடம் கேட்டனர். அதற்கு அந்தணன் ஆழ்வான் ஸந்நிதியில் தமோகுணம் உடையவரும், ஸத்வகுணம் உடையவராவர் என்று நான் அறிந்தவனாகையால் அவ்வாறு கேட்டேன் என்றான். இச்செய்தி பெரியதிருமொழி 8–1–1 அவதாரிகையில் உள்ளது.

எம்பெருமானுடன் கலந்துபரிமாற ஆசைப்பட்ட திருமங்கையாழ்வார் பரகாலநாயகியாக மாறி எம்பெருமானைப்பற்றி ''வாய்வெருவ'' பரகாலநாயகியின் தாய், இவள் திருக்கண்ணபுரத்தெம்பெருமானைத் தான் கண்டிருக்கவேண்டும் என்று ஊகித்தாள். இவ்வாறு தாய் ஊகித்தமைக்கு உவமையாக மேற்கூறிய செய்தி கூறப்பெற்றுள்ளது.

இராமாநுச நூற்றந்தாதியில் ''இராமாநுசன் தன்னைச் சார்ந்தவர் தம் காரிய வண்மை என்னால் சொல்லொணாதிக்கடலிடத்தே''(பாடல் எண்11) என்னும் பகுதிக்கு உரைகண்டவர் 'முதலியாண்டான் ஸ்ரீபாததீர்த்த மஹிமையை' எடுத்துக்காட்டியுள்ளார். ஆழ்வானின் கடாக்ஷமஹிமையையும் எடுத்துக்காட்டாகத் தருதல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

**ஆசார்யாபிமாநமே உத்தாரகம்**

ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தில் ''ஆசார்யாபிமாநமே உத்தாரகம்'' என்னும் கொள்கை உச்சிமேல் வைத்துப் போற்றப்பெறுவதாகும். நம்மாழ்வார் தமது முதல் ப்ரபந்தமான திருவிருத்தம் 99ஆம் பாடலில் ''ஞானப்பிரானையல்லால் இல்லை, நான் கண்ட நல்லதுவே'' என்றருளினார். திருக்கோட்டியூர்நம்பி எம்பெருமானார்க்கு இரகசியமான இடத்தில், ''எம்பெருமானைத் தவிர வேறு எதுவும் தஞ்சமல்ல'' என்றருளினார். இந்த உபதேஶத்தைக்கேட்ட எம்பெருமானார், ஆழ்வான் திருமாளிகைக்கு உச்சிவெயிலிலே வந்து இந்த விஷயத்தை உபதேஶம் செய்தார். உடையவருக்கு எந்தஅளவு அபிமாநம் ஆழ்வான்பால் இருந்தால் இவ்வாறு செய்திருப்பார் என்று சிந்திக்கும்போது ஆழ்வான் பெருமை புலப்படும். அச்செய்தி

வருமாறு:—

''**அல்லாலில்லை** ... இத்தை நம்பி அருளிச்செய்யக்கேட்டருளி, ஆழ்வான் அகத்திலே அமுதுசெய்திருக்கிறவளவிலே உச்சிவெயிலிலே வந்து புகுந்து, 'நம்பி இவ்வர்த்த₂த்தை ஒருவருக்கும் சொல்லாதேகொள் என்றருளிச்செய்தார். உனக்கு இது சொல்லாதிருக்கமாட்டேனிறே' என்று ஸஹகாரி நைரபேக்ஷ்யத்தை அருளிச்செய்தார்'' ஸஹகாரிநைரபேக்ஷ்யம் = கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், ப்ரபத்தியோகம் ஆகியவை ஸஹகாரி எனலாம். அவை உபாயங்களாகா. எம்பெருமானே உபாயம். அவனே மோக்ஷமளிப்பவன். சரமஶ்லோகத்தின் முதல்அடி ஸஹகாரிநைரபேக்ஷ்யத்தைக் கூறுகிறது. மாம் ஏகம் — ப்ரபத்தி உபாயமல்ல என்கிறது. இறைவனே உபாயம் என்னும் செய்தியை இராமானுசர் ஆழ்வானுக்கு உபதேஶித்தார்.

ஆழ்வான் திருநாட்டுக்கு எழுந்தருளின செய்திகேட்டு உடையவர்பட்ட பாட்டை மாமுனிகள் தம் வ்யாக்யானத்தில் காட்டியுள்ளார். அப்பகுதி வருமாறு:—

''ஆழ்வான் திருநாட்டுக்கு எழுந்தருளினபோது உடையவர் விஶ்லேஷம் பொறுக்கமுடியாமல் ''ஒருமகள் தன்னையுடையேன்'' என்றும் ''உலகம்நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன்' என்றும், 'செங்கண்மால் தான் கொண்டு போனான்'' என்றும் அருளிச்செய்தார் என்று ப்ரஸித்₃த₄மிறே. (பெரியாழ் திரு 3—8—4 மணவாளமாமுனிகள் வ்யாக்யானம்.)

ஆசார்யனைத் தந்தையாகவும், ஶிஷ்யனை மகளாகவும் எம்பெருமானைக் கணவனாகவும் கூறுவது மரபு. ஸமாஶ்ரயணம் ஆத்மவிவாஹம் எனப்பெறும். ஆசாரியன் (தந்தை) தன் ஶிஷ்யனை (மகளை), மாப்பிள்ளையான எம்பெருமானுக்குத் தாரைவார்த்துக்கொடுக்கும் சடங்கு ஸமாஶ்ரயணமெனலாம்.

எம்பெருமானார் வேறு எந்த சீடரையும் இவ்வளவு நெருக்கமாகக் கொள்ளவில்லை. ஆகவே ஆசார்யாபிமாநம் பரிபூர்ணமாகப் பெற்றவர் ஆழ்வானே என்று தெரிகிறது. பெரியாழ்வார் திருமொழியில் இடம்பெறும் இப்பாசுரம், ஆழ்வார் தம் திருமகளாரான ஆண்டாளை நினைத்து அருளிச்செய்ததாகவும் கொள்ளலாம். பெரியாழ்வார் ஆண்டாளுக்குத் தந்தையும், ஆசார்யருமாவார். மாமுனிகள் ''எந்தை திருவாய்மொழிப்பிள்ளை'' என்று தம் நூலைத் தொடங்கியுள்ளார் (உப.ரத் 1) என்பதும் காணத்தக்கது.

**உலகம் நிறைந்த புகழ் ஆழ்வானுக்கேயிறே.**

லக்ஷ்மீநாதனை முதற்குருவாக உடைய வைணவமதத்தில், மன்னுபுகழ் சேர் மணவாளமாமுனிகள் சிறப்பிடம் பெறுகிறார். முதற்குருவே மாமுனிகளிடம் திருவாய்மொழிப் பேருரைகள் கேட்டு மகிழ்ந்து ஸ்ரீசைலேஶதனியன் அருளினார் என்பது வைணவர் மரபு. அப்பெருமகனார்,

''உபமாநமஶேஷாணாம் ஸாதூ₄நாம் யஸ்ஸதா₃ऽப₄வத்'' என்கிறபடியே ஸாது₄க்களுக்கெல்லாம் உபமாநமாகச் சொல்லலாம்படி இருக்கையாலே உலகம்

நிறைந்த புகழுள்ளது ஆழ்வானுக்கேயிறே'' என்றருளிச்செய்தபின் ஆழ்வானைப்பற்றி யார் எது எழுதினாலும் நிறைவுடையதாகாது.

இப்பகுதியில் இடம்பெறும் வடமொழி நூற்பாப்பகுதி விஷ்ணுபுராணத்தில் உள்ளது. ''த₄ர்மாத்மா ஸத்ய ஶௌர்யாதி₃ கு₃ணாநாமாகர: பர:। உபமாநமஶேஷாணாம் ஸாதூ₄நாம் யஸ்ஸதா பவத்॥'' (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1–15–156)

இந்த நூற்பா ப்ரஹ்லாதாழ்வானைப்பற்றியது. அவன் தர்மாத்மாவாகவும், உண்மையுடையவனாகவும், நல்ல திறல் உடையவனாகவும், நற்குணக்கடலாகவும், ஸாதுக்களுக்கெல்லாம் உதாரணபுருஷனாகவும் எப்பொழுதும் இருந்தான் என்று கூறுகிறது. பாகவதர்களுள் முதல்வன் 'ப்ரஹ்லாதன்' என்று பெரியோர் கூறுவர். ''ப்ரஹ்லாத₃ நாரத₃ பராஶர புண்ட₃ரீக வ்யாஸாம்ப₃ரீஷ ஶுகஶௌநக பீ₄ஷ்மத₃ால்ப்₄யாந் ருக்மாங்க₃தார்ஜுநவஸிஷ்ட₂ விபீ₄ஷணாதி₃ புண்யாநிமாந் பரமபா₄க₃வதாந் ஸ்மராமி'' என்னும் ஶ்லோகத்தில் பரமபாகவதர்களுள் ''ப்ரஹ்லாதன்'' முதலிடம் பெற்றுள்ளான்.

''பள்ளியிலோதிவந்த தன்சிறுவன்'' என்று திருமங்கையாழ்வார் ப்ரஹ்லாதனைக் குறிப்பிடுகிறார். அவன் சிறுவயதிலேயே ஞானம் நிறைந்தவன். பகவத்பக்திமிக்கவன். ஆழ்வானை ப்ரஹ்லாதனுக்கு உபமாநமாகக் காட்டிய மாமுனிகளுக்கு உபமாநமாகக் கூறலாம்படி ஒருவரும் இல்லை. விஶதவாக்சிகாமணி திருவாக்கில் ''உலகம் நிறைந்த புகழுள்ளது ஆழ்வானுக்கேயிறே'' என்று ஏகாரம் தேற்றப்பொருளில் உறுதியாகக் கூறப்பெற்றுள்ளது. இதற்குமேல் என்ன கூறமுடியும்?

**நிறைவுரை**

ஆழ்வானின் ஆயிரமாண்டு விழா நடக்கிறது; பலபெரியோர்கள் அவர் புகழ் எடுத்தோதுகின்றனர்; எழுதுகின்றனர். அடியேனும் மந்தமதிக்கெட்டினபடி சில விண்ணப்பம் செய்துள்ளேன். நிறைகள் ஆழ்வானருளே! குறைகளுக்கு அடியேனே பொறுப்பேற்கிறேன். இக்கட்டுரையை வைணவ உலகுக்கு அளிக்க வாய்ப்பளித்த ''ஸ்ரீமான் உ.வே.ரகுராமன் ஸ்வாமிக்கும், இக்கட்டுரை எழுதப்பேருதவியாக இருந்த ''வைணவ ஆசார்யர்களின் வாழ்வும் வாக்கும்'' என்னும் நூலை அருளிய முனைவர் ஸ்ரீ.உவே.M.A.வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமிக்கும் அந்நூலைப்படிக்க அளித்த திருமதி. முனைவர் சுதாகோபாலகிருஷ்ணனுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். கீழ்க்காணும் திருமாலைப் பாசுரத்தை மாநஸீகமாகத் திருவரங்கம் ஆழ்வான் ஸந்நிதியில் அவர்முன் பணிந்து விண்ணப்பிக்கிறேன்;

திருமறுமார்வ! நின்னைச் சிந்தையுள் திகழவைத்து
மருவியமனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம்
வெருவரக் கொன்று சுட்டிட்டு ஈட்டியவினையரேலும்
அருவினைப் பயனதுய்யார் அரங்கமாநகருளானே. (திருமாலை 40)

(திருப்பாவை ஸ்வாபதேஶத்தில் ஆழ்வார்கள் குறிக்கப்பெறுகிறார்கள்; இப்பாசுரத்தில்

ஸ்வாபதேஶமாக பவிஷ்யத்ஆசார்யரான ஆழ்வானைப்பற்றி ஆழ்வார் அருளியதாக கட்டுரை ஆசிரியருடன் அடியேன் கொள்ளுகிறேன். இப்பாசுரத்தில் உள்ள செய்திகள் திருஅரங்கனுக்கும், கூரத்தாழ்வானுக்கும் சிலேடையணியில் பொருந்தும். திருமறுமார்வன் — ஸ்ரீவத்ஸசிஹ்நர் (கூரத்தாழ்வானுடைய இயற்பெயர்) பெருமாள் திருமார்பில் திருமருவுண்டு. இருவரும் அரங்கமாநகரில் கோயில் கொண்டுள்ளனர். திருவரங்கத்தில் ஆழ்வான் ஸந்நிதிக்கு அருகிலேயே தொண்டரடிப்பொடியாழ்வார் ஸந்நிதியும் உள்ளது என்பதும் நோக்கத்தக்கது. கீழ்க்காணும் பாடலுடன் கட்டுரை நிறைவுபெறும்:—

உலகெலாம் போற்றிநிற்கும் உடையவர் இனியசீடர்
பலகலை வல்லுநர்நற் பண்பினில் பதரியாவார்
அலகிலாக் கருணையுடை அண்ணல்கூ ரத்தாழ்வான்
மலர்புரை மாணடிகள் அடியனேன் வணங்கியுய்ந்தேன்.

ஸ்ரீமத்கூரபுரீஜாதம் ராமாநுஜபதா₃ஶ்ரிதம்।
ஸ்ரீவத்ஸசிஹ்ந நாமாக்₂யம் வந்தே₃ऽஹம் கு₃ணஸாக₃ரம்॥

மன்னார்குடி ஸ்தாநீகம் வேங்கடாசார்யதாஸன்
காட்டுமன்னார்கோயில்.